மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு தலையில் பலத்த அடிப்பட்டு அறுவை சிகிச்சை செய்து படுத்த படுக்கையாக இருந்தேன் என்றும், மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு கண்பார்வை சரியாக தெரியவில்லை என்றும், மனுதாரர்கள் மேற்படி தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், 10,11 மனுதாரர்கள் மனுதாரரை உடன் இருந்து கவனித்துக்கொண்டார்கள் என்றும், அதனால் 10,11 மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், மனுதாரர்கள் கடந்த 07.10.2023 ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞரை கடந்த 08.08.2025 ம் தேதி சந்தித்து வழக்கின் விவரம் கேட்ட போது தான் மேற்படி விவரங்கள் தங்களுக்கு தெரியவந்தது என்றும், மேற்படி வழக்கின் 1 ம் மனுதாரர் தங்களது தந்தை ஆவார். மனுதாரர்களின் தந்தை 1 ம் மனுதாரர் இறந்துவிட்டதால், மனுதாரர்கள் அவருடைய வாரிசுகள் என்பதால் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றும், தற்போது மனுதாரர்கள் தந்தை தாக்கல் செய்த எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்கிறோம் என்றும், மேற்படி வழக்கில் தங்களுக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், இது வேண்டுமென்றோ, அலட்சியத்தினாலோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இல்லை என்றும், ஆகையால் கடந்த 07.10.2023 ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவாக வேண்டுமென்று மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:**

**3.** மனுதாரர்களின் மனு ஏற்புடையதல்ல என்றும், கடந்த 07.10.2023 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த காலத்தில் மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு தலையில் பலத்த அடிப்பட்டு அறுவைசிகிச்சை செய்து படுத்த படுக்கையாக இருந்தேன் என்றும், மேற்படி

